தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.10.2013**

**வறட்சி நிவாரணம்: விழுப்புரம் மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை: முதல்வர் விளக்கம்**



வறட்சி நிவாரணம் வழங்கியதில் விழுப்புரம் மாவட்டம் புறக்கணிக்கப் படவில்லை என்று முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

சட்டப்பேரவையில் துணைநிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் தேமுதிக உறுப்பினர் வெங்கடேசன் (விழுப்புரம்) பேசும்போது, விழுப்புரம் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்டு முதல்வர் ஜெயலலிதா கூறியது:

தானே புயலால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் விழுப்புரம், கடலூர் ஆகும்.

இந்த 2 மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான கோடி செலவில் நிவாரணத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தினோம்.

வீடு இழந்தவர்களுக்கு 1 லட்சம் வீடு கட்டும் திட்டத்தையும் அறிவித்தேன்.

எனவே எந்தக் காலகட்டத்திலும் விழுப்புரம் மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை. புறக்கணிக்கப்படுவதாக கூறும் கூற்று சரியில்லை.

வறட்சி நிவாரணம்: 50 சதவீதத்துக்கு மேல் பயிர்கள் சேதமடைந்திருந்த விவசாயிகளுக்கே நிவாரணம் வழங்கப்பட்டன. விழுப்புரம் மாவட்டத்தில் 50 சதவீதத்துக்கும் குறைவாகப் பயிர்கள் சேதமடைந்திருந்தன. அதனால் அங்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

டெல்டா பகுதிகளில் வறட்சி நிவாரணமாக ரூ.524 கோடியும், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் ரூ.804 கோடியும் நிவாரணமாக வழங்கப்பட்டன என்றார் முதல்வர் ஜெயலலிதா.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

வட தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ செவ்வாய்க்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

இந்த நிலையில், திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மகாபலிபுரத்தில் 110 மி.மீ. மழையும் உத்திரமேரூரில் 70 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இதேபோல, சென்னை விமான நிலையத்தில் 20 மி.மீ. மழையும், ஆலங்காயம், ஆம்பூர், செய்யாறு ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**மர்ம நோயால் தொடர்ந்து சாகும் மாடுகள்**

போடி அருகே மர்ம நோயால் தொடர்ந்து மாடுகள் இறந்து வருகின்றன. கால்நடை மருத்துவர்கள் முகாமிட்டு ஆய்வு செய்து வருகின்றனர்.

போடி அருகே எரணம்பட்டி கிராமத்தில் 200க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் 500-க்கும் மேற்பட்ட பால் மாடுகள் வளர்த்து வருகின்றனர். மேலும் ஆடுகள், கோழிகளையும் வளர்த்து வருகின்றனர்.

இப்பகுதியில் கடந்த இரண்டு வாரமாக கால்நடைகளுக்கு மர்ம நோய் தாக்கி வருகிறது. இதனால் தினமும் மாடுகள் தொடர்ந்து இறந்து வருகின்றன. கடந்த இரண்டு வாரத்தில் 30 மாடுகள் வரை இறந்துவிட்டதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து மாடுகள் இறந்து வருவதால் மற்ற மாடுகளின் உரிமையாளர்களும் கவலையடைந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் கால்நடை மருத்துவத்துறை சார்பில் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் கால்நடைகளுக்கு நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மாட்டு தொழுவங்களில் பிளீச்சிங் பவுடர் தெளித்தல், புகையடித்தல் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் மாடுகளுக்கு என்ன நோய் பரவுகிறது, எதனால் மாடுகள் இறக்கின்றன என்பது புரியாமல் பொதுமக்கள் புலம்புகின்றனர். மாவட்ட நிர்வாகமும், கால்நடை துறையும் துரித நடவடிக்கை எடுத்து எரணம்பட்டி கிராமத்தில் மாடுகளுக்கு பரவியுள்ள நோய் குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து எரணம்பட்டி கால்நடை மருத்துவர் பிரபாகரன் கூறுகையில், மாடுகளுக்கு என்ன நோய் பரவியுள்ளது என்பது தெரியவில்லை, இறந்த ஆடு, மாடுகளின் உறுப்புகளை ஆய்வுக்காக மதுரை கால்நடை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ளோம். ஆய்வு முடிவு வந்த பின்பே தீவிர சிகிச்சை அளிக்க முடியும். இக்கிராமத்தில் சுழற்சி முறையில் 4 கால்நடை மருத்துவர்கள், 4 கால்நடை ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் 5 பேர் 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர் என தெரிவித்தார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.77 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 70.77 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,491 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கனஅடி நீரும்,

வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.27 டி.எம்.சி

**ரூ.8.5 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்**

கோபி வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.8.5 லட்சத்துக்கு வாழைத்தார்கள் ஏலம் போயின.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் ஏலம் மூலமாக வாழைத்தார்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன்படி, வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

காசிபாளையம், குள்ளம்பாளையம், பொலவக்காளிபாளையம், சிறுவலூர், அரச்சலூர், மொடக்குறிச்சி, பங்களாப்புதூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள், 8 ஆயிரம் வாழைத்தார்களை கொண்டு வந்தனர்.

ஏல விற்பனை விவரம்: கதலி ரக வாழைத்தார் கிலோ ரூ.35-க்கும், நேந்திரன் ரூ.40.50-க்கும் விலை போயின. செவ்வாழை ரூ.680-க்கும், தேன்வாழை ரூ.600-க்கும், ரொபஸ்டா ரூ.480-க்கும், மொந்தன் ரூ.510-க்கும், பூவன் ரூ.580-க்கும், பச்சைநாடன் ரூ.310-க்கும், ரஸ்தாளி ரூ.425-க்கும் விலை போயின.

வாழைத்தார்கள் மொத்தமாக ரூ.8 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனையாயின. கோபி, சத்தி, ஈரோடு, திருப்பூர், கோவை பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏல விற்பனையில் கலந்து கொண்டனர்.

தேங்காய் ஏலம்: ஏலத்துக்கு 6 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், தேங்காய் ஒன்று அதிகபட்ச விலையாக ரூ.14.70-க்கும், குறைந்தபட்சமாக ரூ.8.50-க்கும், சராசரி விலையாக ரூ.12-க்கும் ஏலம் போயின. தேங்காய் மொத்தமாக ரூ.80 ஆயிரத்துக்கு ஏலத்தில் விற்பனையாயின.

**கால்நடைகள் இறப்பு: நிவாரணம் வழங்க நடவடிக்கை**

பொன்னை அடுத்த கீரைசாத்து கிராமத்தில் மர்ம நோய் தாக்கி கால்நடைகள் இறந்தது தொடர்பாக, தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பி நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் கூறினார்.

ராணிப்பேட்டையை அடுத்த பொன்னை அருகேயுள்ள கிராமங்களில் உள்ள ஆடுகள், மாடுகள் மர்ம நோய் தாக்கி கடந்த சில நாள்களாக இறந்துவருகின்றன. இதுதொடர்பாக நடவடிக்கை கோரி, கிராம மக்கள் போராட்டம் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்கள் கமலநாதன், மனோகரன், உதவி இயக்குநர் இளங்கோ ஆகியோர் தலைமையில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சிகிச்சை முறைகள் குறித்து கீரைசாத்து கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் திங்கள்கிழமை நேரில் சென்று ஆய்வு நடத்தினார்.

அப்போது ஆட்சியரிடம், காலாவதியான மருந்தைக் கொண்டு சிகிச்சை அளிப்பட்டதாக விவசாயிகள் புகார் கூறினர். விசாரணையில் இது உண்மை என உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் கூறினார்.

இதையடுத்து, ஆட்சியர் நந்தகோபால் கூறியதாவது:

சுமார் 800-ம் மேற்பட்ட கால்நடைகளுக்கு நோய் தாக்கப்பட்டுள்ளதாகக் கண்டறிப்பட்டுள்ளது.

அவற்றில் கீரைசாத்து, எஸ்.என்.பாளையம், மேல்பாடி, பெருமாள்குப்பம் ஆகிய கிராமங்களில் சுமார் 44 மாடுகள் இறந்ததாகத் தெரியவந்துள்ளது. இதுகுறித்த அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழக அரசுக்கு அனுப்பி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலூர் மாவட்டம் முழுவதிலும் நோய் தாக்குதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும் என்றார்.

ஆய்வின்போது காட்பாடி வட்டாட்சியர் தட்சணாமூர்த்தி, சோளிங்கர் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**கம்பு நேப்பியர் புல் விற்பனைக்குத் தயார்**

கம்பு நேப்பியர் புல் (கோ-4) கரணைகள் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பசுந்தீவனப் பயிர்களில் அதிக மகசூல் தரக் கூடிய இந்தக் கம்பு நேப்பியர் புல், அனைத்து மண் வகைகளிலும் நன்கு வளரக் கூடியவையாகும். இந்தப் புதிய ரகத்தில் 3.5 சதம் சர்க்கரை சத்து உள்ளது. ஒரு ஏக்கரில் ஆண்டுக்கு 150 டன் பசுந்தீவன மகசூல் பெற முடியும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 13000 கரணைகள் தேவைப்படும்.

நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் முழுத் தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**கரும்பு விவசாயிகள் மானியத்தில் இடுபொருள், உபகரணம் பெற அழைப்பு**

பெரம்பலூர் மாவட்டத்தில் செம்மை கரும்புச் சாகுபடியில் செயல் விளக்கம் அமைக்க 50 சத மானியத்தில் இடுபொருள்களும், நுண்ணீர் பாசனம் அமைக்க 100 சத மானியத்தில் உபகரணங்களும் பெற விவசாயிகளுக்கு வேளாண்துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து பெரம்பலூர் வேளாண் உதவி இயக்குநர் சேகர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

எஸ்.எஸ்.ஐ. எனப்படும் செம்மைக் கரும்புச் சாகுபடியானது, கரும்பு சாகுபடியில் ஒரு புதிய அணுகுமுறையாகும். மேலும், நீர் சேமிப்பு வழிகளில் புதிய முயற்சியாகும். இந்த முறையில் விளைச்சலை அதிகப்படுத்தும் உத்திகளோடு, தண்ணீர் சேமிப்பு குறித்தும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த முறையில் உற்பத்தி அதிகரிப்பதோடு நீர்நிலை ஆதாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும்.

செம்மை கரும்பு சாகுபடி முறையானது குறைந்த அளவு விதை நாற்றுகள் மற்றும் குறைந்த அளவு தண்ணீரை உபயோகித்து, சரியான அளவு ஊட்டச்சத்து மற்றும் பயிர்பராமரிப்பின் மூலம் அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் முறையாகும்.

ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து, நாற்றங்கால் அமைத்தல் 25 முதல் 35 நாள்கள் இளம் வயதான நாற்றுகளை எடுத்து நடவு செய்தல், நடவின்போது வரிசைக்கு வரிசை குறைந்தது 5 அடி இடைவெளியும், நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியும், பராமரித்தல், நீர்ப் பாசனத்தின்போது தேவையான அளவு ஈரப்பதம் மட்டுமே நீர் பாய்ச்சுதல், இயற்கை சார்ந்த உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல், ஊடுபயிர் பராமரித்து மண்வளம் மற்றும் மகசூல் அதிகரித்து ஆவன செய்தலே செம்மை கரும்பு சாகுபடியின் முக்கியக் கோட்பாடுகளாகும்.

தண்ணீர் முளைப்புத் திறன் குறைக்கப்பட்டு, ஊடுபயிர் மூலம் இரட்டை வருமானம் பெறச்செய்து, சரியான உரமிட்டு ஊட்டச்சத்து பராமரிப்பை மேம்படுத்தி, பயிர் சாகுபடி காலத்தை ஓரளவு குறைக்கும் செம்மை நெல் சாகுபடிக்கான செயல் விளக்கம் அமைப்பதற்கான இடுபொருள்கள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. அதாவது, இரண்டரை ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் மதிப்பிலான இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. மேலும், சிறு, குறு விவசாயிகள் நுண்ணீர் பாசனத்திற்காக 100 சத மானியத்தைப் பெறலாம். மேலும் விவரங்களுக்கு, பெரம்பலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது சம்பந்தப்பட்ட வேளாண் உதவி அலுவலர்களை அணுகிப் பயன் பெறலாம்.

**கறிக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கறிக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கால்நடை உதவி இயக்குநர் மருத்துவர் எஸ்.ராஜேந்திரன் தலைமை வகித்தார். விழுப்புரம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் மருத்துவர் வி.கண்ணன் கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி அளித்தார்.

நாமக்கல் மாவட்டத்தைப் போல, விழுப்புரம் மாவட்டத்திலும் கோழிப்பண்ணை அமைக்க வேண்டும் என்று முதல்வர் எண்ணி வருகிறார். அதன் பேரில், விழுப்புரம் மாவட்டத்தில் 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கள்ளக்குறிச்சி கோட்டத்தில் 25 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கோழியின அபிவிருத்தி திட்டத்தில் அரசு 500 கறிக்கோழிகள் வளர்க்க ஒரு பயனாளிக்கு ரூ.8 லட்சத்து 25 ஆயிரம் வழங்கப்படுகிறது. அதில் 25 சதவீதம் தமிழக அரசும், 25 சதவீதம் நபார்டு மூலம் மானியம் வழங்கப்படுகின்றது.

கள்ளக்குறிச்சி கோட்டத்தில் 25 பயனாளிகளுக்கு நடைபெற்ற கோழி வளர்ப்பு குறித்த பயிற்சியில் முதலில் முறையாக கொட்டகை அமைப்பது, அதன் பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து கூறினார். கோழிக் குஞ்சு வாங்கி வரும் முன்பு எடையை பரிசோதிக்க வேண்டும். எடை குறைவாக இருந்தால் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கோழிக் குஞ்சு வளர்ப்பில் முதல் 10 நாள்களுக்கு மஞ்சள் நிற குண்டு பல்பு வெப்பத்திற்காக பொருத்த வேண்டும். தண்ணீர் டேங்க் வைத்தால் தான் கோழி குஞ்சுகளை காப்பாற்ற முடியும்.

தீவன தட்டுக்களை இடைவெளிமுறையாக அதற்கேற்ற இடைவெளி விட்டு வைக்க வேண்டும். கோழிக் குஞ்சுகளுக்கு சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குஞ்சுகளுக்கு சளி இருக்கும்போது அதன் சப்தம் சற்று குறைவாகவே இருக்கும்.

குஞ்சுகளுக்கு சளி பிடித்தால் முதலுதவியாக கருமிளகு(அ) வெங்காயம், வெள்ளைப் பூண்டை அறைத்து தண்ணீரில் கலந்து வைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை கூறினார் மருத்துவர் கண்ணன். பயிற்சியில் வானாபுரம் மருத்துவர் ஜெகதீஸ்வரி, ரிஷிவந்தியம் மருத்துவர் சுலோச்சனா, எஸ்.ஒகையூர் மருத்துவர் அ.செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முதல்வருக்கு கால்நடை ஆய்வாளர்கள் நன்றி**

புதிய கால்நடை ஆய்வாளர் பணி நியமனத்துக்கு உத்தரவு பிறப்பித்த முதல்வருக்கு கால்நடை ஆய்வாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.கள்ளக்குறிச்சி கோட்ட தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர்கள் சங்கக் கூட்டம் சங்கராபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு கோட்டச் செயலர் சிங்காரவேல் தலைமை வகித்தார். கால்நடை ஆய்வாளர்கள் முனியாண்டி, முரளிகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் ஒரத்தநாடு, ஓசூர், முகுந்தராயபுரம் ஆகிய அரசுப் பண்ணைகளில் 350 கால்நடை ஆய்வாளர்கள் பணி நியமனத்துக்கு உத்தரவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் சின்னையாவுக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**முதல்வருக்கு "வெங்காயம்'பரிசளித்த பாஜகவினர்**

அதிகரித்து வரும் வெங்காய விலை உயர்வைக் குறிக்கும் வகையில், தில்லி முதல்வர் ஷீலா தீட்சித்துக்கு தீபாவளிப் பரிசாக ஒரு கூடை வெங்காயம் அளிக்கப்பட்டது என்று பாஜக மூத்த தலைவர் விஜய் ஜாலி தெரிவித்தார். இது தொடர்பாக திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: தில்லியில் நிலவும் வெங்காயப் பற்றாக்குறை காரணமாக, தில்லி முதல்வர் ஷீலா தீட்சித் தனது உணவில் வெங்காயத்தை சேர்க்கவில்லை என்று தெரிவித்துள்ளார். இதைக் கருத்தில் கொண்டு அவரை நேரில் சந்தித்து, தீபாவளிப் பரிசாக ஒரு கூடை வெங்காயம் அளிக்கப்பட்டது. இதற்காக ஏற்கெனவே சந்திக்க நேரம் கேட்டிருந்தேன். அதன்படி அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வெங்காயத்தை பரிசளித்தேன். வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த தில்லி அரசு தவறிவிட்டது. இதை எடுத்துக்காட்டும் விதத்தில் முதல்வருக்கு வெங்காயம் பரிசளிக்கப்பட்டது என்றார் விஜய் ஜாலி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.10.2013**

## பூக்கள் விலை உயரும்: வியாபாரிகள் தகவல்

திண்டுக்கல் : தீபாவளியை முன்னிட்டு பூக்களின் விலை இரண்டு நாட்களில் இருமடங்காக உயரும் என்று எதிர்பார்ப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த இரண்டு வாரங்களாக திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் பூக்கள் ஒரே சீரான விலையில் விற்கப்பட்டு வந்தன. வரத்து குறைவு மற்றும் விசேஷ நாட்கள் இல்லாதது இதற்கு காரணமாக இருந்தது.

நேற்றைய நிலவரப்படி மல்லி, முல்லை கிலோ ரூ. 250, ஜாதிப்பூ ரூ. 200, காக்கரட்டை ரூ. 220 க்கு விற்கப்பட்டது. மற்ற பூக்களின் விலை குறைந்த அளவிலேயே இருந்தது.

தீபாவளி மற்றும் விசேஷ நாட்கள் வர இருப்பதால் இரண்டு நாட்களில் பூக்களின் விலை தற்போதைய விலையில் இருந்து இரண்டு மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். வரத்து குறைவு, தேவை அதிகம் என்பதால் பூ விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளைச்சல் பாதிப்பு: தக்காளி விலை "கிடு கிடு' உயர்வு

பழநி : வெங்காயத்தை தொடர்ந்து, போதிய மழையில்லாததால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, விலையும் உயர்ந்துள்ளது.

திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி பகுதிகளில், ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் தக்காளிகள், கேரளா, ஆந்திரா, கோல்கட்டா போன்ற பகுதிகளுக்கு, ஒசூர் மார்க்கெட் மூலம் அனுப்பிவைக்கப்படுகிறது. போதிய மழையில்லாததால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது.

கடந்த மாதம் பெட்டி(15 கிலோ) ரூ.200க்கு விற்கப்பட்ட தக்காளி, தற்போது பெட்டி ரூ.450 முதல் ரூ.550 வரை, தரத்திற்கு ஏற்றவாறு விற்கப்படுகிறது. தீபாவளியை முன்னிட்டு, மேலும் விலை அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து தக்காளி மொத்த வியாபாரி கோபாலகிருஷ்ணன் கூறுகையில்," திருப்பூர், திண்டுக்கல்,கோவை மாவட்டத்தில் விளைவிக்கப்படும் தக்காளிகளை மொத்தமாக வாங்கி, பிறமாநிலங் களுக்கு அனுப்பிவைக்கிறோம். விளைச்சல் பாதிப்பு காரணமாக, மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்ந்துள்ளது. தீபாவளிபண்டிகை வருவதால், விலை குறைய வாய்ப்பு இல்லை,' என்றார்.

## பயிர் இன்சூரன்ஸ் வழங்காமல் அலைக்கழிப்பு:விவசாயிகள் தவிப்பு

திண்டுக்கல் : பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில், இழுப்பீடு வழங்காமல் அலைக் கழிக்கப்படுவதால், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

தேசிய அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் பல்வேறு பயிர் இன்சூரன்ஸ் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், கடந்த ஆண்டு 15 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழக விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். அரசு மான்யம் போக, கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள் 50 சதவீதமும், கடன் பெறாத விவசாயிகள் 45 சதவீதமும் பிரிமீயமாக செலுத்தியுள்ளனர். கடந்த ஆண்டு மழை பொய்த்ததால், சென்னையை தவிர்த்த 31 மாவட்டங்களை அரசு வறட்சி பகுதிகளாக அறிவித்தது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்கிய நிலையிலும் இதுவரை பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. இதனால், விவசாயிகள் பணிகளை மேற்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர்.

விவசாயிகள் சங்க தலைவர் லட்சுமணப்பெருமாள் கூறியதாவது: கடந்த ஆண்டு வாங்கிய பயிர் கடன்களை செலுத்தாததால், வங்கிகள் மீண்டும் கடன் தர மறுக்கின்றனர். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் இழப்பீட்டு தொகை வழங்காமல்

அலைகழிக்கப்படுகிறது. விவசாயிகள் அதிக வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய நிலை உள்ளது, என்றார்.

## வெங்காயத்தை நெருங்குது தக்காளி

பழநி : மழையில்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வெங்காயத்தை போல தக்காளி விலையும் உயர்ந்துவருகிறது.

திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி பகுதிகளில், ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் தக்காளி, கேரளா, ஆந்திரா, கோல்கட்டா போன்ற பகுதிகளுக்கு, ஒசூர் மார்க்கெட் மூலம் அனுப்பிவைக்கப்படுகிறது. மழையில்லாததால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.15க்கு விற்கப்பட்ட தக்காளி, தற்போது ஒரு கிலோ ரூ.35க்கு விற்கப்படுகிறது. தீபாவளியை முன்னிட்டு, மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. வெங்காயத்தின் விலை ரூ.75யை எட்டியுள்ள நிலையில், தக்காளி விலையும் உயர்ந்து வருகிறது.

## "லைசென்ஸ்' இன்றி உரம், பூச்சி மருந்து விற்றால் நடவடிக்கை விவசாயத்துறை எச்சரிக்கை

சிவகங்கை : "லைசென்ஸ்' இன்றி உரங்களை விற்றால், குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்," என, விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை தெரிவித்தார். அவர் கூறியதாவது:

மாவட்டத்தில், தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகள் 106 உள்ளன. இது தவிர, தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம், 125 கடைகள் செயல்படுகின்றன. இந்த உரம், பூச்சி மருந்து கடைகளை ஆய்வுசெய்ய, வெளிமாவட்டங்களில் இருந்து, விவசாய அதிகாரிகள் வருகை தர உள்ளனர். எனவே, "லைசென்ஸ்' இன்றி, உரம், பூச்சி மருந்துகளை விற்க கூடாது. "லைசென்ஸ்'களை உரிய காலத்தில் புதுப்பிக்க வேண்டும். "பிரின்சிபல்

சர்டிபிகேட்' "ஓ' பார்ம் வேலிடிட்டி இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம், மொத்த விற்பனையாளர்களுக்கு மட்டுமே கொள்முதல் செய்யவேண்டும். உரங்களை, இனம்வாரியாக முறையாக அடுக்கி வைக்கவேண்டும். பூச்சி மருந்துகளை காலாவதியாகி வரும் நாள் வாரியாக அடுக்கி வைக்கவேண்டும். அனுமதியில்லாத உரம், பூச்சி மருந்துகளை விற்க கூடாது. பில் புத்தகத்தில் விவசாயி கையெழுத்து அவசியம். தவறும் பட்சத்தில் 1985 உரக்கட்டுப்பாடு சட்டம் மற்றும் பூச்சி மருந்து சட்டம் 1968 விதிகள், 1971ன்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். "லைசென்ஸ்' இன்றி, உரங்கள், பூச்சி மருந்துகளை விற்றால் போலீஸ் மூலம், குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## விவசாயிகள் சங்க ஒன்றிய மாநாடு

கிருஷ்ணகிரி: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கிருஷ்ணகிரி ஒன்றிய மாநாடு கார்வேபுரத்தில் நடந்தது.

மனோகரன் தலைமை வகித்தார். சுபத்ரா, பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணை செயலாளர் சிவாஜி மாநாட்டை கொடியேற்றி துவக்கி வைத்தார். மாநில துணை தலைவர் லகுமையா தீர்மானங்கள் குறித்து பேசினார். மாவட்ட தலைவர் சீனிவாசன், செயலாளர் கண்ணு ஆகியோர் பேசினர்.

மாநாட்டில், "60 வயதான விவசாய தொழிலாளர்களுக்கு மாதம், 3,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும். வனவிலங்கு சட்டத்தில் இருந்து காட்டுப்பன்றியை நீக்க வேண்டும். வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். குடியிருக்கும் வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

மாநில துணை செயலாளர் மாசிலாமணி, இ.கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் நரசிம்மன், மாநிலக்குழு உறுப்பினர் வெங்கடாசலம், ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசன், ராஜேந்திரன், ஸ்ரீதர் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர். மங்கம்மாள் நன்றி கூறினார்.

## கரும்பு விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம்

கிருஷ்ணகிரி: வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கொழுந்தம்பட்டு பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலைகளுக்கு இடையே கரும்பு சாகுபடி பரப்பு பிரித்தல் குறித்து விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நவம்பர், 5ம் தேதி கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.

சர்க்கரைத் துறை இயக்குனர் மகேசன் காசிராஜன் வெளியிட்ட அறிக்கை: சென்னை உயர்நீதிமன்றத்தின் வழங்கிய தீர்ப்பின்படி வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சர்க்கரை ஆலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், கொழுந்தம்பட்டில் இயங்கி வரும் பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலைகளுக்கு இடையே கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை மற்றும் கல்லாவி பிர்காக்களில் கரும்பு சாகுபடி பரப்பு பிரித்தல் தொடர்பாக விவசாயிகளிடம் கருத்து கேட்புக் கூட்டம் தமிழ்நாடு அரசு சர்க்கரை துறை இயக்குனரால் நவம்பர், 5ம் தேதி காலை, 10 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.

தொடர்புடைய மனுதாரர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் பங்குதாரர்கள் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பதிவு செய்யலாம்.மேலும், கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள் மற்றும் அங்கத்தினர்கள் தங்களின் அடையாள ஆதாரங்களான ரேஷன் கார்டு நகல் அல்லது வாக்காளர் அட்டை நகல் அல்ல, ஃபோட்டோவுடன் கூடிய வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் கரும்பு எடை சீட்டு நகல் அல்லது கரும்பு கிரயப்பட்டுவாடா ரசீது ஆகியவற்றை கண்டிப்பாக எடுத்து வரவேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பசுந்தேயிலைக்கு குறைந்த விலை வழங்குவதாக குற்றச்சாட்டு

கோத்தகிரி : "கோத்தகிரி நெடுகுளா மற்றும் கீழ்கோத்தகிரி பகுதியில் பசுந்தேயிலைக்கு குறைந்தளவே விலை வழங்கப்படுகிறது' என, விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கீழ்கோத்தகிரி மற்றும் நெடுகுளா பகுதிகளில், இண்கோ தேயிலைத்

தொழிற்சாலை மூடப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் பெரும்பாலும் தனியார் தொழிற்சாலைகளை மட்டுமே நம்பியுள்ளனர். இதை சாதகமாக பயன்படுத்தி, ஒரு சில தனியார் தேயிலை தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் அவர்களுக்குள் "சிண்டிகேட்' அமைத்து, எந்த தொழிற்சாலை ஏல மையத்தில் குறைந்த விலை பெறுகிறதோ, அந்த தொழிற்சாலையின் விலையை வார விலையாக நிர்ணயிக்கின்றனர். இதன் மூலம் மற்ற தொழிற்சாலைகளும் ஒரே மாதிரியான விலையை விவசாயிகளுக்கு வழங்கி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்நிலை நீடிப்பதால், சிறு குறு விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.

தவிர, சில தொழிற்சாலைகள் கம்ப்யூட்டர் தராசில் "ஸ்டிக்கர்' ஒட்டி, எடையை மறைத்துள்ளதாகவும் புகார் தெரிவிக்கின்றனர்.

தேயிலை வாரியம் உட்பட சம்மந்தப்பட்ட துறைக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், விவசாயிகள் சந்தேகம் அடைந்துள்ளனர். இப்பிரச்னையை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு உரிய விலை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, கீழ்கோத்தகிரி வட்டார காங்., தலைவர் மணியன் மத்திய தொழில் துறை அமைச்சருக்கு மனு அனுப்பியுள்ளார்.

## மாசு கட்டுப்பாடு வாரியம் முன் முற்றுகை: விவசாயிகள் அறிவிப்பு

கரூர்: "விதிமுறைகளைமீறி செயல்படும் சாயப்பட்டறை உரிமையாளர்கள் மீது, கிரிமினல் நடவடிக்கை எடுக்காவிட்டால், கரூர் மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலகம் முன் குடும்பத்துடன் முற்றுகை போராட்டம் நடத்தப்படும்' என, சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி தெரிவித்தார்.

கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஜீரோ சீஸ்டம் இல்லாமல் செயல்பட்டு வந்த சாயப்பட்டரைகளில், கடந்த 2011 ம் ஆண்டு நவம்பர் மாதம் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

ஆனால், ஜெனரேட்டர் மூலம் இரவு மற்றும் விடுமுறை நாட்களில் நூல்களுக்கு சாயம் போடுவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர்.

அமராவதி ஆற்றுப்பாசன பகுதிகளில், சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், நேற்று காலை அமராவதி வாய்க்காலில் விடப்பட்ட சாயக்கழிவை நீரை, ஒரு பாட்டிலில் பிடித்து கொண்டு கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தனர். பிறகு மாவட்ட கலெக்டர் ஜெயந்தியிடம், சாயப்பட்டரைகள் உரிமையாளர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்ககோரி, மனு கொடுத்தனர்.

பிறகு, விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி கூறியதாவது:

கடந்த 15 ஆண்டுக்கு பிறகு, அமராவதி வாய்க்காலில் தற்போது தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால், விவசாயிகள் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பணப்பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். இந்நிலையில், மூடப்பட்ட சாயப்பட்டரைகளில் இருந்து நாள்தோறும் சாயக்கழிவு நீர், வாய்க்காலில் கலக்கப்படுகிறது.

இதுகுறித்து மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தால், அவர்கள் கண்டுகொள்வது இல்லை. தொடர்ந்து இதே நிலை நீடிக்கும் பட்சத்தில், விவசாயிகள், ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகளை அழைத்து கொண்டு, குடும்பத்துடன் கரூர் மாவட்ட மாசுகட்டு பாடு வாரிய அலுவலகம் முன், விரைவில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம்" என்றனர்.

சாயப்பட்டரை உரிமையாளர்களும் மனு:

அமராவதி ஆற்றின் வாய்க்காலில், சாயக்கழிவு கலப்பதாக விவசாயிகள் மனு கொடுத்த நிலையில், கரூர் சிறு மற்றும் குறுநூல் சலவை, சாயப்பட்டரை உரிமையாளர் கள், மாவட்ட கலெக்டர் ஜெயந்தியிடம் நேற்று மனு கொடுத்தனர். அதில், 50 க்கும் மேற்பட்ட சாயப்பட்டரைகளில் சோலார் பெட் முறையில், சாயக்கழிவு நீரை சுத்தம் செய்ய அனுமதிக்க வேண்டும்' என, கூறப்பட்டிருந்தது.

## வெட்டிய கரும்பை எடுப்பதில் காலதாமதம்: விவசாயிகளுக்கு நஷ்டம்

திருத்தணி : வெட்டிய கரும்புகளை ஏற்றிச் செல்வதிலும், "கட்டிங்" ஆர்டர் கொடுப்பதிலும், ஆலை நிர்வாகம் காலதாமதம் செய்வதால் நஷ்டம் ஏற்படுகிறது

என, விவசாயிகள் புலம்புகின்றனர். திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில், இயங்கி வருகிறது. திருத்தணி, அத்திமாஞ்சேரிபேட்டை, ஆர்.கே.பேட்டை, திருவள்ளூர், அரக்கோணம் மற்றும் சாலை ஆகிய கோட்டத்தில், 11,500 விவசாயிகள் கரும்பு பயிரிட்டு உள்ளனர். இந்தாண்டு, கரும்பு அரவை, கடந்த, 4ம் தேதி துவங்கியது. ஆலை நிர்வாகம் உரிய நேரத்தில் வாகனங்கள் அனுப்புவதில்லை, கரும்பு வெட்ட ஆர்டரும் கொடுப்பதில்லை என, கரும்பு விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். அதிகாரிகள் மெத்தனம் இதுகுறித்து, திருத்தணி ஒன்றிய கரும்பு விவசாயிகள் சிலர் கூறியதாவது: கூட்டுறவு ஆலைக்கு கரும்பு ஒட்டுவதற்கு முறையாக பதிவு செய்துள்ளோம். கரும்புகள் வெட்டி அனுப்புவதற்கு தயாராக வைத்திருந்தும், நிர்வாகம் அதை எடுத்து வருவதற்கு, மூன்று நாட்கள் ஆகின்றன. இப்படி காலதாமதமாக கரும்புகள் கொண்டு வருவதால், ஈரப்பதம் குறைந்து, எடையும் குறைகிறது. அதே போல், கரும்புகள் வெட்ட ஆர்டர் கொடுக்காமல், சில அதிகாரிகள் மெத்தனம் காட்டுகின்றனர். இதைவிட, ஆந்திர மாநில கரும்பையும் இந்த ஆலைக்கு கொண்டு வருகின்றனர். எங்களிடத்தில் வாகனங்கள் இருந்தும், கரும்பு ஒட்டுவதற்கு அனுமதிப்பது இல்லை. இது போன்ற காரணங்களால், நாங்கள் நஷ்டம் அடைகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர். நடவடிக்கை எடுக்கப்படும் இதுகுறித்து, கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக அதிகாரி மலர்விழி கூறுகையில், "ஒரு நாளைக்கு, 2,300 டன் கரும்பு அரவை செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு டோக்கன் கொடுத்து, கரும்புகள் கொண்டு வருகிறோம். கூலியாட்கள் பற்றாக்குறையால், விவசாயிகள் ஒரே நேரத்தில் கட்டிங் ஆர்டர் கேட்கின்றனர். இதனால், சற்று காலதாமதம் ஆகிறது. ஆந்திர மாநில கரும்பு மற்றும் பதிவு செய்யாத கரும்புகள் ஆலைக்கு வருவதில்லை. அப்படி தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட கரும்பு அலுவலர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு 15,000 கனஅடியா

மேட்டூர்: மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று காலை, 10 மணி முதல் வினாடிக்கு, 15,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு, ஆக.,2 முதல் நீர்திறக்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் கடந்த, 22ம் தேதி மேட்டூர் அணை டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டது.

இரு நாட்களுக்கு பின், பருவமழை தீவிரம் குறைந்ததால், கடந்த, 25ம் தேதி அணையில் இருந்து வினாடிக்கு, 5,000 கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கப்பட்ட நிலையில், நேற்று காலை, 10 மணி முதல் நீர்திறப்பு வினாடிக்கு, 15,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம், 300 கனஅடியாக இருந்த கிழக்கு, மேற்கு கால்வாய் நீர்திறப்பு நேற்று காலை, 8.30 மணிக்கு, 500 கனஅடியாக உயர்த்தப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 85.580 அடியாகவும், நீர் இருப்பு, 48.580 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 7,833 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது.

## மானிய முறையில் சொட்டுநீர் பாசனம்

ராசிபுரம்: "விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க, மானியத்துடன் கடன்வசதி வழங்கப்படும்' என, புதுச்சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் பயிறு இயக்கம் சார்பில், புதுச்சத்திரம் வட்டாரத்தில் துவரை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, 45 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர் பாசனம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதிகள் அமைத்து தரப்படும்.

விருப்பமுள்ள விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.10.2013**

**மொட்டை மாடிகளில் தோட்டம் அமைக்கலாம் தோட்டகலைத்துறை விளக்கம்**

கீழக்கரை, : கீழக்கரை பகுதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். நகரில் வீடுகள் நெருக்கமாக உள்ளதால் மரங்கள் வளர்பதற்கு வாய்ப்பில்லை. தற்போது நகருக்கு வெளியே தோட்டங்களில் உள்ள மரங்களை அழித்து வீட்டடிமனைகளாக விற்பனை செய்கின்றனர். இதனால் மழை குறைந்து நிலத்தடி நீர் இறங்கி கிணறுகள் வறண்டுவிட்டன.

கீழக்கரையில் பெரும்பாலான வீடுகளில் மொட் டை மாடி இருப்பதால் அதில் காய்கறி மற்றும் கீரைத் தோட்டம், மலர் தோட்டம் அமைக்கலாம் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறுத்து தோட்டக்கலை அலுவலர் தெரிவித்ததாவது:

மாடியில் மட்டுமல் லாது வீட்டில் எந்த இடத் தில் சூரிய ஒளி கிடைக்கிற தோ அங்கெல்லாம் காய்கறி செடிகளை வளர்க்க முடி யும். வீட்டு தோட்டத்தில் இரண்டு முறை உண்டு. நிழல்வலை குடில் அமைத்து தோட்டம் போடலாம். திறந்த வெளியில் தோட்டம் அமைப்பது மற்றொரு முறை. நிழல் வலைக்குள் செடிகளை வளர்க்கும் போது தண்ணீர் எளிதில் ஆவியாவது இல்லை. மேலும் பூச்சிகளும் தாக்கமுடியாது.

பொதுவாக திறந்த வெளியில் வளர்ப்பதையே பலரும் விரும்புகின்றனர். சாதாரண பாலித்தீன் பைகளில் செடிகள் வளர்க்கும்போது நாளடைவில் அவை வெப்பத்தால் இளகி வளைந்து நீர்கசிவை ஏற்படுத்தும். ஆனால் யூவி பாலித்தீன் என்ற பிரத்யேக பைகள் மூன்றாண்டுவரை தாக்கு பிடிக்கும்.

வெங்காயம், உருளைக்கிழங்கு தவிர மற்ற அனை த்து காய்கறிகளையும் வீட்டு மொட்டை மாடி தோட்ட த்திலேயே சாகுபடி செய்ய லாம். இதற்கு அதிகளவு இடமும் தேவையில்லை. 200 சதுர அடி இடமே போதுமானது. மாடி வீட்டு தோட்டத்தில் மறந்துகூட ரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் பயன்

படுத்தக்கூடாது.

பூச்சி விரட்டி, பயிர் வளர்ச்சி ஊக்கிகள் என்று அனைத்தையுமே இயற்கையான முறையில் நீங்க ளே தயாரிக்கலாம். அல்லது தரமான கடைகளில் வாங் கியும் பயன்படுத்தலாம். சொட்டு நீர் அமைப்பதை விடுத்து நாமே தினமும் தண்ணீர்விடும்போது நமக்கும் செடிகளுக்குமான உறவு பலப் படும். கூடவே மனது க்கு உற்சாகமும், நிம்மதியும் கிடைப்பதோடு உடற்பயிற்சியாகவும் அமை ந்து உடலுக்கு வலு சேர்க்கும்.

மாடி தோட்டம் மூலம் தினமும் 200 முதல் 300 கிராம் காய்கறிகள் பெற முடியும். மாடித்தோட்டம் அமைக்க முன்வருவோரு க்கு 50 சதவீத மானியத்தில் வீரிய ஒட்டுரக கத்தரிகாய், வெண்டைக்காய், தக்காளி மற்றும் பாகற்காய், புடலங் காய், பீக்கங்காய் போன்ற விதைகள் மற்றும் கீரை விதைகள் திருப்புலாணி மற்றும் ராமநாதபுரம் தோட்டகலை அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.

கலவை உரங்களுக்கு தேவையானவை செம்மண், குப்பை, தொழுஉரம், ஆட்டுஉரம், மணல். செடி வளர் ந்த பிறகு பயிர்பாதுகாப்பு மருந்தான வேப்பம் புண் ணாக்கு அல்லது சூடம் மோனாஸ் வேருக்கடியில் வைக்க வேண்டும். வாரம் ஒருமுறை மண்புழு உரம் அவசியம் வைக்க வேண் டும். மண்புழு உரம் ராமநாதபுரம் வேளாண் அறிவியல்துறை அலுவலகத்தில் கிலோ ரூ.5க்கு விற்கப்படுகிறது. ராமநாதபுரம் பாரதி யார் தெரு கவிதாஜெயராமன் கூறுகையில், மாடி தோட்டத்தில் பீக்கங்காய், பாகற்காய், வெண்டைகாய் மற்றும் கீரைவகை செடிகள் அமைத்துள்ளேன். இதனால் எங்கள் வீட்டு காய்கறி தேவை பூர்த்தியாகிறது என்றார்.

திருப்புல்லாணி தோட் டகலை அலுவலர் அழகே சன் கூறுகையில், மாடி தோட்டம் அமைப்பவர்கள் தண்ணீர் கசிவு ஏற்பட்டு காங்கிரீட் துருபிடித்து விடும் என்று எண்ணினால் பிளாஸ்டிக் பேப்பர் வாங்கி பைப் அருகில் விரித்து அதற்கு மேல் செடி தொட் டிகளை வைக்கலாம்.

தண்ணீர் கசிவு ஏற்படாத வண்ணம் மக்கிய தென்னை நார் கழிவுகளால் ஆன கிட் ஒன்று ரூ.100க்கு ராமநாதபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில் விற்கப்படுகிறது. இதில் நான்கு செடிகள் வைக்கலாம்.

இதன் மூலம் ராமநதபுரத்தில் அதிகமானோர் மாடி தோட்டம் அமைத்துள்ளனர். மேலும் விபரங்களுக்கு 99653 68583 என்ற எண்ணில் தோட்டகலை அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

**மானிய விலையில் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள்**

ராமநாதபுரம், : ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் வீரிய ஒட்டு ரக காய்கறி விதைகள் மற்றும் உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகள் மானிய விலையில் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் காய்கறி உற்பத்தியை பெருக்கும் வகையில் தோட்டக்லைத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கத்தரி, தக்காளி, வெண்டை, முருங்கை, அவரை, புடலை, பீர்க்கய் உள்ளிட்ட கிராமத்தில் விளையும் காய்கறிகள் மற்றும் காரட், பீட்ரூட், உருளை போன்றவைகள் மதுரை மார்க்கெட் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது.

கிராமத்தில் விளையும் காய்கறிகள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கிராம விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் வீரிய ரக காய்கறிகள் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 50 சதவீத மானிய விலையில் அவரை, கொத்தவரை, கத்திரி, வெண்டை, பாகற்காய் உள்ளிட்ட காய்கறி விதைகள் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து தோட்டகலைத்துறை துணை இயக்குனர் கெங்காதரன் கூறுகையில், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலைத்துறை அபிவிருத்தி திட்டத்தில் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த 2011-2012ம் ஆண்டில் 585 எக்டேர் பரப்பளவில் காய்கறி விரிவாக்கத்திற்கு 8.32 லட்சம் நிதி உதவியுடன் 1150 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 2013ம்

ஆண்டிற்கு 8.32 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 2139 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றார்.

**விவசாயத்துக்கு வழங்கப்படும் மின்சாரத்தை தவறாக?பயன்படுத்தினால் இணைப்பு துண்டிப்பு கலெக்டர் அதிரடி உத்தரவு**

தேனி, : தேனி மாவட்டத்தில் விவசாயத்துக்கு வழங்கப்படும் மின்சாரத்தை தவறாக பயன்படுத்தினால் மின் இணைப்பை துண்டிக்குமாறு கலெக்டர் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தேனி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் தேனி கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை வகித் தார். இதில் வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முத்தையா, தேனி மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் போது, பெரியகுளம் வனப்பகுதியில் குரங்குகள், காட்டுப்பன்றிகள், காட்டு எருமைகள் மூலம் விவசாயிகளுக்கும், விளை பொருள்களுக்கும் பெருத்த அளவில் சேதம் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் பலமுறை தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

இதற்கு பதிலளித்த கலெக்டர் பழனிசாமி, பெரியகுளம் வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வனத்துறையினர் இணைந்து நடவடிக்கை எடுத்து, வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் வருவதைத் தடுக்க உத்தரவிட்டார்.

சாத்தாகோவில்பட்டி பள்ளி பின்புறம் வனத்துறை கட்டுப் பாட்டில் உள்ள 5 மீட்டர் சாலையை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டனர். இதற்கு பதிலளித்த கலெக்டர் வனத்துறையினர் விதிப்படி அனுமதி கிடைத்தால், சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

தேனி அருகே லட்சுமிபுரம் விவசாயிகள், தங்களது பட்டா நிலங்களில் மீன்குட்டை அமைக்க அரசு அனுமதி அளிக்க வேண்டும், என்றனர். இதற்கு பதிலளித்த கலெக்

டர், பட்டா நிலத்தில் குட்டை அமைக்க மீன்வளத்துறை உதவி இயக்குர், கனிம வளத்துறை  அதிகாரிகள் இணைந்து ஆய்வு செய்து மண்ணை பரிசோதனைக்கு அனுப்பி இருக்கின்றனர். முடிவு தெரிந்தவுடன், மீன் பண்ணை அமைக்க அனுமதி அளிப்பது குறித்து தெரிவிக்கப்படும், என்றார்.
சோத்துப்பாறை ராஜவாய்க்காலில் தடுப்பணை அமைக்குமாறு விவசாயிகள் கேட்டனர். இதற்கு, நபார்டு வங்கி மூலம் நிதி ஆதாரம் கிடைத்ததும், தடுப்பணை கட்டப்படும் என தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தின்போது, கலெக்டர் பழனிசாமி, மாவட்டத்தில் விவசாய மின்இணைப்பினை தவறாக பயன்படுத்தும் நபர்கள் மீது மின்வாரிய அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் ஆய்வு மேற்கொண்டு விவசாயம் அல்லாத பிற தேவைகளுக்கு விவசாய மின் இணைப்புகளை பயன்படுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், மின் இணைப்பினை துண்டிக்கவும் உத்தரவிட்டார்.
தேனி வீரப்ப அய்யனார் கோயில் செல்லும் வழியில் உள்ள மந்தைகுளம் கண்மாயை தூர்வாற விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு, உடனடியாக இக்கண்மாயை தூர்வாற பொதுப்பணி துறையினருக்கு கலெக்டர் உத்தரவிட்டார். இக்கூட்டத்தின்போது, வனவிலங்குகளால், விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க மாதந்தோறும் முதல் திங்கள் கிழமையன்று வனத்துறை அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்திட கலெக்டர் உத்தரவிட்டார்.

**திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த வாழை வணிக வளாகம் விவசாயிகள் சங்கம் முதல்வருக்கு கோரிக்கை**

திருச்சி,: உலகத்தரம் வாய்ந்த வாழை வணிக வளாகம் திருச்சியில் அமை த்திட வேண்டும் என்று காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச் சங்க செயல்வீரர்கள் கூட்டம் திருச்சி தேசிய மேல்நிலைப்பள்ளியில் நேற்று நடந்தது. சங்கத் தலைவர் கனகசபை தலைமை வகித்தார். காப்பாளர்கள் தீட்சதர் பாலசுப்ரமணியம், பேராசிரியர் சிராஜூதின், என்ஜினியர் நடராஜன், துணைத் தலைவர்கள் அரியநாதன், சுகு

மார், சிவராஜன், இணைச் செயலாளர்கள் கோபால தேசிகன், மணிக்குட்டி ஆகி யோர் முன்னிலை வகித்த னர். கூட்டத்தில், தமிழ்நாட்டிலேயே மிக அதிக மான அளவில் ஆண்டு முழுவதும் பயிரிட்டு அறு வடை ஆகும் பயிர் வாழை. திருச்சி மாவட்டத்தில் பூவன், ரஸ்தாளி, கற்பூரவல்லி, மொந்தை, உள் ளிட்ட பலவகை வாழைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட காலங்களை தவிர மற்ற காலங்களில் வாழைப் பழத்திற்கு விலை இல்லை. அழுகும் பொரு ளாக இருப்பதால் அதிக நாட்கள் வைத்து கொள்ள முடியவில்லை. இதனால் வாழைப் பழங்களை பாது காக்க குளிர்பதன அறையு டன் கூடிய உலகத் தரம் வாய்ந்த வாழை வணிக வளாகம் திருச்சி உள்பட 10 மாவட்டங்களில் அமைத் திட வேண்டும், தற்போது திருச்சி வாழை ஆராய்ச்சி மையத்தில் 20 விதமான வாழை உப பொருட்கள் தயாரிக்கலாம் என்று கண்டறிந்துள்ளனர். ஜப்பான் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நார்ச்சத்துடன் கூடிய வாழை ரகத்தை இங்கு பயிரிடவும், வாழை நார் ஆடைதயாரிப்பு தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதிலும் திருச்சி வாழை ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. வாழையில் இருந்து விதவிதமான உணவுப் பொருட்களுடன், பாய், காகிதம் போன்ற பிற பொருட்களையும் நபார்டு வங்கி உதவியுடன் தயா ரித்து விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. எனவே கரூர் மாவட்டத் தில் வாழை உபபொருட் கள், ஆடைதயாரித்தல் ஆலையை நிறுவவேண்டும், திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங் கம் மாவட்டத்தை தமிழக முதல்வர் அறிவிக்க வேண் டும், ஜீயபுரத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே நான்கு வழிப்பாலம் அமைத்திட வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.பொருளாளர் ஜெபமாலை வரவேற்றார்.

செயலர் ரங்கசாமி நன்றி கூறினார்.

**தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்**

சென்னை : ஆந்திர கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தம் காரணமாக அங்கு நல்ல மழை பெய்து வருகிறது. மேலும் வட தமிழகத்திலும் அந்த

காற்றழுத்தம் பரவியுள்ளதால் தமிழகத்திலும் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று மாமல்லபுரம் 110 மிமீ மழை பெய்துள்ளது. உத்திரமேரூர் 70 மிமீ, கலவாய், சென்னை 20 மிமீ, ஆலங்காயம், ஆம்பூர், செய்யார், அண்ணா பல்கலைக் கழகம் 10 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில் அந்த காற்றழுத்தம் ஆந்திர கடலோரம் முதல் தமிழக கடலோரப் பகுதி வரை பரவியுள்ளதால் தமிழகத்தில் இன்றும் பரவலாக மழை பெய்யும். குறிப்பாக காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர்,திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒரு சில இடங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**வெங்காயம் விலை உயர்வு நீடிக்கிறது**



புதுடெல்லி : வெங்காயம் விலை வடமாநிலங்களில் பெரும் பிரச்னையை ஏற்படுத்தி வருகிறது. நாடு முழுவதும் பரவலாக வெங்காயம் விலை உயர்ந்தே காணப்படுகிறது. புதிய வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால், மொத்த விற்பனை விலை ஓரளவு குறையத் தொடங்கியுள்ளது. இருந்தபோதிலும், சில்லரை விற்பனையில் விலை குறையவில்லை. பல நகரங்களில் தொடர்ந்து கிலோ ரூ.90க்கு விற்கப்படுகிறது.

அக்ரா, ராஜ்கோட், விஜயவாடா, ஐதராபாத் ஆகிய நகரங்களில் மொத்த விற்பனையில் வெங்காயம் கிலோ ரூ.42 முதல் ரூ.45க்கு விற்கப்படுகிறது. இந்த

சூழ்நிலையில், வரத்து கணிசமாக அதிகரிப்பதால் தீபாவளிக்கு பின்னர் விலை படிப்படியாக குறையும் என்று மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகமும், சந்தை நிபுணர்கள், வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஜம்மு,காஷ்மீரில் கிலோ ரூ.90, டெல்லியில் கிலோ ரூ.80, ஹிசார், வாரணாசி, லக்னோ, அமிர்தசரஸ் ஆகிய நகரங்களில் கிலோ ரூ.70 முதல் ரூ.75க்கு விற்கப்படுகிறது. நாட்டின் மற்ற பகுதிகளில் குறைந்தபட்ச விலை ரூ.45 ஆக உள்ளது. அதிகபட்சமாக கிலோ ரூ.70 முதல் ரூ.80க்கு விற்கப்படுகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து டெல்லிக்கு வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அடுத்த சில தினங்களில் விலை குறையத் தொடங் கும் என்று அரசின் தேசிய தோட்டக்கலை ஆய்வு நிறுவனத்தின் (என்எச்ஆர்டிஎப்) இயக்குநர் ஆர்.பி. குப்தா தெரிவித்தார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய வெங்காயம் மொத்த விற்பனை சந்தையான மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள லாசல்கானில் கடந்த 10 தினங்களில் மொத்த விற்பனை விலையில் கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.32.30 வரையில் குறைந்துள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் காரீப் பருவ சாகுபடியில் வெங்காயம் அறுவடை நடந்து வருகிறது. ஆனால், மழையால் பாதிப்பு ஏற்பட்டு வெங்காயத்தின் வரத்து குறைந்தது. இது பிரச்னையை அதிகரித்துவிட்டது.

வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. ஏற்றுமதியை கட்டுப்படுத்தியது. இறக்குமதிக்கு அனுமதி அளித்தது. அரசின் நாபெட் கூட்டுறவு அமைப்பு, பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து, உள்பட பல் நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு டெண்டர் கோரியிருந்தது. இந்த டெண்டர் இன்று திறக்கப்படுகிறது. புதிய வெங்காயம், இறக்குமதி வெங்காயம் வரத்து அதிகரித்ததும் விலை

கணிசமாக குறையும். இதுஎல்லாம் அடுத்த 2,3 வாரங்களில் நடக்கும் என்று தெரிகிறது.

வெங்காயம் விலை விவரம் கி / ரூ.

| ஊர்கள் | சின்ன வெங்காயம் | | பெரிய வெங்காயம் | |
|---|---|---|---|---|
| | சில்லரை | மொத்தம் | சில்லரை | மொத்தம் |
| சென்னை | 90 | 80 | 75 | 65 |
| சேலம் | 70 | 65 | 65 | 45 |
| திருச்சி | 80 | 70 | 70 | 60 |
| மதுரை | 70 | 65 | 60 | 55 |
| நெல்லை | 80 | 70 | 60 | 50 |
| கோவை | 80 | 70 | 60 | 50 |

**வெங்காயத்தை தொடர்ந்து தேங்காய் விலை கிடுகிடு உயர்வு**



நெல்லை : வெங்காயத்தை தொடர்ந்து தேங்காய் விலையும் உயர்ந்து வருகிறது. கிலோ ரூ.28ஆக உயர்ந்துள்ளதால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிப்படைந்து உள்ளனர்.

பல்லாரி வெங்காயம் மற்றும் சிறிய வெங்காயம் விலை கடந்த சில மாதங்களாக உச்சத்தில் உள்ளது. இடையில் சில தினங்கள் கிலோ ரூ.50 வரை குறைந்த

வெங்காயம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. தற்போது பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.70, சின்ன வெங்காயம் ரூ.85க்கு விற்பனையாகிறது. இதனால் பெரும்பாலான குடும்பத்தினர் வெங்காயம் பயன்படுத்துவதை குறைத்துள்ளனர்.

இந்த நிலையில் தேங்காய் விலையும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த 10 தினங்களுக்கு முன் கிலோ ரூ.20ஆக இருந்த தேங்காய் விலை ரூ.24, ரூ.26 ஆக உயர்ந்து வந்தது. நேற்று கிலோ ரூ.28க்கு விற்பனையானது. இதனால் சிறிய தேங்காய் ரூ.12க்கு குறையாமல் விற்கப்பட்டது.

இது குறித்து தேங்காய் வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த சில மாதங்களாக நீடித்த வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி போதிய அளவு இல்லை. தென்காசி, திசையன்விளை, குமரி மாவட்டங்களில் இருந்து வரும் தேங்காய்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.  தேங்காய் விலை அடுத்த சில தினங்களுக்கு ஏறுமுகமாகவே இருக்கும்' என்றனர். அன்றாட சமையலுக்கு தேவைப்படும் தேங்காய் விலை உச்சத்திற்கு சென்றுள்ளதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

29.10.2013

**மழை மற்றும் வரத்து குறைவால் காய்கறிகள் விலை உயர்வு; சென்னையில் ஒரு முருங்கைக்காய் ரூ.10–க்கு மேல் விற்பனை**



சென்னை,

மழை காரணமாக காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதால் சென்னையில் காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது. ஒரு முருங்கைக்காய் 10 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

தேவை அதிகரிப்பு

தீபாவளிக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், காய்கறிகளின் தேவை அதிகரித்துள்ளதாலும், மழை காரணமாக காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதாலும் சென்னையில் காய்கறிகள் விலை அதிகரித்து காணப்படுகிறது.

தீபாவளி சனிக்கிழமை வருவதால், பெருமாளை வணங்குபவர்கள் மற்றும் பலர் தீபாவளி அன்று அசைவ உணவு சமைப்பதை தவிர்ப்பார்கள். இதனால் அவர்கள் வித விதமாக காய்கறிகளை சமைத்து உண்பார்கள். இதனாலும் காய்கறிகளின் தேவை அதிகரிக்கும்.

<u>காய்கறி வரத்து குறைவு</u>

இந்த நிலையில், ஆந்திரா மற்றும் ஒடிசா மாநிலங்களில் கனமழை பெய்ததன் காரணமாக காய்கறிகளின் வரத்து குறைந்து உள்ளதாலும் வெங்காயம், தக்காளி போன்றவற்றின் விலை அதிகரித்து உள்ளது.

மழை மற்றும் பனி காலங்களில் முருங்கை மரத்தில் பூக்கள் உதிர்ந்து விடுவதாலும், காய்களில் கறுப்பு நிறம் படர்வதாலும், பச்சை முருங்கைக்காய்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் தற்போது ஒரு கிலோ முருங்கைக்காய் 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதில் பெரிய காய் என்றால் ஒரு கிலோவுக்கு 7 முதல் 8 காய்களும், சிறிய காய்கள் என்றால் ஒரு கிலோவுக்கு 10 முதல் 12 காய்களும் எடை நிற்கின்றன. இதனால் ஒரு காய் 6 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

<u>விலை பட்டியல்…</u>

அதன்படி ஒரு கிலோ காய்கறிகள் விலை விவரம் வருமாறு:–

காய்கறியின் பெயர் விலை (ரூபாயில்)

1. வெங்காயம் 40–70

2. நாட்டு தக்காளி 50–60

3. பெங்களூர் தக்காளி 50–60

4. கத்தரிக்காய் 30–40

5. அவரைக்காய் 60

6. சீனிஅவரைக்காய் 40

7. வெண்டைக்காய் 30

8. கேரட் 60

9. முருங்கைக்காய் 100

10. பச்சை மிளகாய் 30

11. பாவைக்காய் 40

12. பீன்ஸ் 50

13. சவுசவு 30

14. பால் சுரக்காய் 24

15. முட்டைகோஸ் 25

16. உருளைக்கிழங்கு 28

17. சாம்பார் வெங்காயம் 80–100

18. புடலங்காய் 30

19. பீட்ரூட் 30

20. சேனை 30

21. சேப்பங்கிழங்கு 40

22. முள்ளங்கி 20–40

23. வாழைக்காய்(1 எண்ணம்) 5–10

24. பூசணிக்காய் 10–12

25. கோவைக்காய் 30

26. மாங்காய் 50

27. நாட்டு பூண்டு 60–80

28. மலை பூண்டு 100–120

29. மல்லிக்கீரை(1 கட்டு) 8

30. புதினா(1 கட்டு) 5

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு மணிலா வரத்து அதிகம்**



திண்டிவனம்,

திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஒரே நாளில் 750 மணிலா மூட்டைகள் குவிந்தன.

**மணிலா**

திண்டிவனம் பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயிகள் தங்களது விளைநிலத்தில் சாகுபடி செய்துள்ள விளை பொருட்களை அறுவடை செய்து

திண்டிவனம்–செஞ்சி சாலையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வருகின்றனர். தினந்தோறும் காலையில் விவசாய பொருட்கள் ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது.

திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கொள்முதல் செய்யப்படும் மணிலாவில் இருந்து அதிகளவு எண்ணை கிடைக்கும். எனவே பல்வேறு நகரங்களில் இருந்து வரும் வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு மணிலாவை கொள்முதல் செய்கின்றனர். இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மற்ற ஒழுங்கு முறை விற்பனை கூடத்தை விட, திண்டிவனத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மணிலா அதிக விலை போகும் என்பது விவசாயிகளின் நம்பிக்கையாகும்.

**<u>கூடுதல் விலை</u>**

தற்போது திண்டிவனம் பகுதியில் மணிலா அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. இதன் காரணமாக நேற்று ஒரே நாளில் 750 மணிலா மூட்டைகள் குவிந்தன. ஒரு மணிலா மூட்டை (80 கிலோ அடங்கியது) ரூ.4 ஆயிரத்து 409 முதல் ரூ.4 ஆயிரத்து 850 வரை விலைபோனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் ரூ.300 கூடுதல் விலைபோனதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.  இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.